# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2025, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 40.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 6/2025

## 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் 1 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்

(அ) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) இப்பிரிவு தவிர்ந்த, இச்சட்டத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்."; அத்துடன்

(ஆ) அதன் (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலமும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நீக்கம் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் தொடக்கத் தேதிக்கு முன்னர் பாகங்கள் V, VI, VIII, IX மற்றும் X இன்கீழ் முறையாக செய்யப்பட்ட எதுவும் செல்லுபடியானதாகவிருப்பதாகவும் தொடர்ந்தும் வலுவிலிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) பிரிவுகள் 13, 14, 15, 16 அல்லது 18 என்பவற்றின்கீழ் கட்டுப்பாட்டாளரொருவர் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெறுமிடத்து, அத்தகைய கட்டுப்பாட்டாளர் முறையற்ற தாமதமின்றியும் மற்றும் அத்தகைய கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள்ளும் -

(அ) அத்தகைய கோரிக்கை வழங்கப்பட்டதா என் பதை; அல்லது

(ஆ) அத்தகைய காரணங்களின் வெளிவிடுகை ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய கோரிக்கை மறுக்கப்பட்டதா என்பதை அதற் கான காரணங்களுடன்,

தரவுடன் தொடர்புபட்டவருக்கு எழுத்தில் தெரிவித் தல் வேண்டும்.";

(2) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) கட்டுப்பாட்டாளர் ஒருவர் குறித் தளிக்கப்பட்ட காரணங்களுக்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப் பகுதிக்கான நீடிப்பொன்றைத் தேவைப்படுத்து மிடத்து, அத்தகைய காலப்பகுதி இரண்டு மாதங் களைக் கொண்ட மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாமென்பதுடன், அது கோரிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(1ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் காலப்பகுதி நீடிக்கப்படும் பட்சத்தில், கட்டுப்பாட்டாளர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒருமாத காலப்பகுதியொன்று காலவதியாவதற்கு முன்னர், அத்தகைய நீடிப்பு தொடர்பில் தரவுடன் தொடர்புபட்டவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(1இ) கட்டுப்பாட்டாளர், 13, 14, 15, 16 அல்லது 18 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையொன்று மறுக்கப்பட்டமை தொடர் பில் அதிகாரசபைக்கு மேன்முறையீடு செய்வதற் கான உரிமை கிடைக்கக்கூடியதாகவுள்ளது என்பது பற்றி தரவுடன் தொடர்புபட்டவருக்கு அறிவித்தல் வேண்டும்.";

(3) அதன் (2) ஆம் உட்பிரிவில், "பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 13, 14, 15, 16 அல்லது 18" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(4) அதன் (4) ஆம் உட்பிரிவில் "பிரிவுகள் 13, 14, 15 அல்லது 16" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 13, 14, 15, 16 அல்லது 18" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(5) அதன் (5) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "மரபுரிமையாளரொருவரினால்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மரபுரிமையாள ரொருவரினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(6) அதன் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூல மும்:-

"(6) பிரிவு 13, 14, 15, 16 அல்லது 18 என்பவற்றின்கீழ் தரவுடன் தொடர்புபட்டவர் ஒருவரினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்று கட்டுப்பாட்டாளரினால் கட்டணமின்றி இணங்கி யொழுகப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அதிகாரசபையானது, அத்தகைய கோரிக்கைகளுக்குப் பயன் கொடுப்பதற்கு எந்த கட்டளைக்கற்களின் அல்லது சூழ்நிலைகளின்கீழ் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் கட்டணமொன்று அறவிடப்படலாமோ அந்த கட்டளைக்கற்களை அல்லது சூழ்நிலைகளை, விதிகள் என்னும் வாயிலாக தீர்மானிக்கலாம்."; அத்துடன்

(7) அதன் (7) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின்கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின் றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அதன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) கட்டுப்பாட்டாளர் ஒருவர் -

(அ) பிரிவு 13 இன்கீழ் தனிப்பட்ட தரவுக்கான அணுகலை வழங்குவதற்கு மறுத்துள்ளவிடத்து;

(ஆ) பிரிவு 14(1) இன்கீழ் சம்மதத்தை மீளப்பெற அனுமதிப்பதற்கு மறுத்துள்ளவிடத்து அல்லது பிரிவு 14(2) இன்கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செயன்முறைப்படுத்துவதனைத் தவிர்ப்பதற்கு மறுத்துள்ளவிடத்து;

(இ) பிரிவு 15 இன்கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்திசெய்வதற்கு அல்லது பூரணப்படுத்து வதற்கு மறுத்துள்ளவிடத்து;

(ஈ) பிரிவு 16 இன்கீழ் தனிப்பட்ட தரவை அழித்து விடுவதற்கு மறுத்துள்ளவிடத்து;

(உ) பிரிவு 17(2) இன்கீழ் தரவுடன் தொடர்புபட்ட வரின் கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து; அல்லது

(ஊ) பிரிவு 18(1) இன்கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செயன்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வ தற்கான கோரிக்கையை மறுத்துள்ளவிடத்து,

தரவுடன் தொடர்புபட்டவர் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிவத்திலும், முறையிலும், அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அத்தகைய மறுப்புக்கெதிராக அதிகாரசபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைப் பெற்றதன்மேல், அதிகாரசபையானது –

(அ) பிரிவு 13 இன்கீழ் தனிப்பட்ட தரவுக்கான அணுகலை வழங்க மறுப்பதற்கான கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததா என்பதையும்;

(ஆ) பிரிவு 14(1) இன்கீழ் சம்மதத்தை மீளப்பெற அனுமதிப்பதனை மறுப்பதற்கான அல்லது பிரிவு 14(2) இன்கீழ் தனிப்பட்ட தரவை மேற்கொண்டு செயன்முறைப்படுத்துவதனை தவிர்க்காமைக்கான கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததா என்பதையும்;

(இ) பிரிவு 15 இன்கீழ் தனிப்பட்ட தரவை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பூரணப்படுத்துவதற்கு மறுப்பதற்கான கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்ட முறையானதாக இருந்ததா என்பதனையும்;

(ஈ) பிரிவு 16 இன்கீழ் தனிப்பட்ட தரவை அழித்துவிட மறுப்பதற்கான கட்டுப்பாட்டாளரின் முடிபு சட்டமுறையானதாக இருந்ததா என்பதையும்;

(உ) கட்டுப்பாட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட 17(2) ஆம் பிரிவின்கீழான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததா என்பதையும்;

(ஊ) பிரிவு 18(1) இன்கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட செயன்முறைப்படுத்தலின் அடிப்படையின்மீது மட்டுமேயுள்ள முடிபொன்றைப் பரிசீலனை செய்வ தற்கான மறுப்பு சட்டமுறையானதாக இருந்ததா என்பதையும்,

தீர்மானிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்றைப் பெற்றதன்மேலும் மற்றும் அவசியமான புலனாய்வுகளை நிறைவு செய்தபின்னரும், அதிகாரசபை –

(அ) மேன்முறையீடு அனுமதிக்கப்படுகின்றதா என்பதை; அல்லது

(ஆ) அதற்கான காரணங்களுடன், மேன்முறையீட்டுக் கான அனுமதி மறுக்கப்படுகின்றதா என்பதை,

விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதி யினுள் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபை அத்தகைய தீர்மானத்தினை தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் தெரிவித்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "அமைச்சினால், அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சினால் அல்லது அரசாங்கத் திணைக்களத்தினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:-

"(iii) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் என்றவகையாக அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக, செயன்முறைப்படுத்தலின் தன்மையினதும் தரவுடன் தொடர்புபட்டோரின் மீதான அதன் தாக்கத்தினதும் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளைப் பாதிக்கின்ற தீங்கேற்படும் ஆபத்தொன்றை விளைவிக்கின்ற செயன்முறைப்படுத்தலின் வகுதிகள்."; அத்துடன்

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தரவுச் செயன்முறைப்படுத்தல் தேவைப்பாடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழான அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான, விடயத்துக்கேற்ப, தரவுச் செயன்முறைப்படுத்தல் கடப்பாடுகள் அல்லது தேவைப்பாடுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு எவ்வாறு இணங்கியொழுகுவது என்பதுபற்றி கட்டுப்பாட்டாளருக்கு அல்லது செய்முறைப்படுத்துநருக்கு மதியுரையளித்தல்;"; அத்துடன்

(இ) அதன் (உ) என்னும் பந்தியில், "தரவுப் பாதுகாப்புத் தொடர்பான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தொடர்பான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவில், "பெயர்குறிக்கப்பட்ட விடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தரவுப் பாதுகாப்பு அலுவலரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(5) அதிகாரசபையிடமிருந்தான எழுத்திலான கோரிக்கையொன்றின் மேல், கட்டுப்பாட்டாளர், இப்பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீட்டை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய மதிப்பீட்டுடன் தொடர்புடைய வேறு எவையேனும் தகவல்களை வழங்குதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலமும்;

(3) அதன் (7) ஆம் உட்பிரிவில், “கட்டுப்பாட்டாளர் ஈடுபடும்போதெல்லாம் அத்துடன் அத்தகைய” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஈடுபடும்போதி லெல்லாம், அத்தகைய” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அதற்கான ஓரக்குறிப்பில் “தீங்கின் ஆபத்துக்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளும் முன்கலந்தா லோசனைக்கான தேவைப்பாடும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “தீங்கின் ஆபத்துக்கள்”; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“எல்லைக்கப் பாலான தரவோட்டம்

26. (1) கட்டுப்பாட்டாளரொருவர் அல்லது செய்முறைப்படுத்துநரொருவர் பாகம் I, பாகம் II அத்துடன் விடயத்துக்கேற்ப, பிரிவுகள் 20, 21, 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்றவிடத்து மட்டுமே, அத்தகைய கட்டுப்பாட்டாளர் அல்லது செய் முறைப்படுத்துநர் எல்லைக்கப்பாலான தரவோட்டத்தில் ஈடுபடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இணங்கி யொழுகுகையை உறுதிப்படுத்தும் நோக்கத் துக்காக, ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், இச்சட்டத்தின்கீழ் கிடைக்கப்படற்பாலனவாகவுள்ள தரவுடன் தொடர்புபட்டோரின் உரிமைகளுக்குத் தோதான காப்புகளையும் பரிகாரிப்புகளையும் உறுதிப்படுத்துவதற்கு மூன்றாவது நாட்டில் பெறுநருக்குள்ள பிணிக்கின்றவையும் வலுவுறுத்தப்படற்பாலவையுமான உறுதிப்பாடு களை உறுதிப்படுத்தும் 33 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்படும் பணிப்பொன்றின்மூலம் குறித்

துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சாதனங்களை சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், பின்வருமாறாகவிருப்பின் இலங்கைக்கு வெளியே எல்லைக்கப்பாலான தரவோட்டத்தில் ஈடுபடலாம் -

(அ) தரவுடன் தொடர்புபட்டவருக்கு அத்தகைய செயன்முறைப்படுத்தலின் நிகழ்தகு ஆபத்துக்கள் பற்றி அறிவிக்கப்பட்ட பின்னர், தரவுடன் தொடர்புபட்டவர் முன்மொழியப்பட்ட எல்லைக்கப்பாலான தரவோட்டத்துக்கு தெளிவான முறையில் சம்மதித்திருப்பின்;

(ஆ) தரவுடன் தொடர்புபட்டவருக்கும் கட்டுப்பாட்டாளருக்கும் இடையேயான ஒப்பந்தமொன்றைச் செயல் நிறைவேற்றுவதற்காக அல்லது தரவுடன் தொடர்புபட்டவரின் கோரிக்கையின்பேரில் கட்டுப்பாட்டாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் ஒப்பந்தத்துக்கு முன்னரான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்;

(இ) தரவுடன் தொடர்புபட்டவர் தொடர்பான சட்ட உரிமைக் கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்காக, பிரயோகிப்பதற்காக அல்லது எதிர்வாதிடுவதற்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்;

(ஈ) இச்சட்டத்திற்கான அட்டவணை I இன் (எ) என்னும் தலைப்பில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாக பொதுமக்களின்

அக்கறைசார் காரணங்களுக்காகக் கைமாற்றமானது அவசியமாகவிருப்பின்;

(உ) தரவுடன் தொடர்புபட்டவரின் அல்லது சம்மதமளிப்பதற்கு உடல் ரீதியில் அல்லது சட்டரீதியில் இயலாதவராகவுள்ள அவரது சட்டப் பாதுகாவலரின் உயிருக்கு, உடனலத்துக்கு அல்லது காப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள அவசர நிலைமைக்குப் பதிலிறுப்பதற்குக் கைமாற்றமானது அவசியமாக விருப்பின்;

(ஊ) கைமாற்றமானது இலங்கைக்கூடாக தனிப்பட்ட தரவின் மாற்றுகையொன்றை மாத்திரம் உருவாக்கியிருந்தால்; அல்லது

(எ) அத்தகைய செயன்முறைப்படுத்தல் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப் படக்கூடியவாறான வேறெவையேனும் நிபந்தனைகளின்கீழ் அனுமதிக் கப்படின்.

(4) பகிரங்க அதிகாரசபையொன்றாக வுள்ள ஒரு கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப்படுத்துநர், (5) ஆம் உட்பிரிவின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான தனிப்பட்ட தரவு வகுதிகள் தொடர்பில் எல்லைக்கப்பாலான தரவோட்டங்களில் ஈடுபடுதலாகாது.

(5) அமைச்சரானவர், அதிகாரசபையினால் அல்லது பகிரங்க அதிகாரியொருவராகவுள்ள கட்டுப்பாட்டாளர் அல்லது செய்முறைப் படுத்துநர் ஒருவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றின்மேல், இயைபான நியதிச்சட்ட அல்லது ஒழுங்குபடுத்தற் குழுவுடன் கலந்தாலோசித்து, (4) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக தனிப்பட்ட தரவு வகுதிகளை விதித்துரைக்கலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அதன் பிரிவு 51அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:-

"வழிகாட்டு நெறிகள்

**51அ.** அதிகாரசபையானது, மதியுரைக் குழுக்களினால் வகுத்தமைக்கப்பட்டு அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட 33 ஆம் பிரிவின் (ச) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட துறைசார் வழிகாட்டுநெறிகள் மற்றும் 12 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தரவுப் பாதுகாப்பு முகாமை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கருமங்களுட்பட, இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் காலத்துக்குக்காலம் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இருபத்திநான்கு" எனும் சொல்லுக்குப் பதிலாக, "முப்பத்தாறு" எனும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தரவுப் பாதுகாப்பு அலுவலர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" "தரவுப் பாதுகாப்பு அலுவலர்" என்பது, 20 ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எனப் பொருளாகும் என்பதுடன் ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் நேரடியாக தொழிலிலமர்த்தப்படாத, ஆனால் 20(5) ஆம் பிரிவின்கீழான பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற

மூன்றாம் திறத்தவரொருவரையும் உள்ளடக்குகின்றது;";

(2) "பகிரங்க அதிகாரசபை" என்னும் சொல்லமைப்புக் கான விரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடு வதன்மூலமும்:-

" "பகிரங்க அதிகாரசபை" என்பது, ஓர் அமைச்சு, ஏதேனும் திணைக்களம், மாகாணசபை, உள்ளூரதிகாரசபை, அல்லது ஒரு மாகாணசபையின் ஓர் அமைச்சு அல்லது திணைக்களம் எனப் பொருளாகும் என்பதுடன் பின்வருவதனை உள்ளடக்காது;

(அ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம்; அல்லது

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டி ணைக்கப்பட்ட ஒரு கம்பெனி;"; அத்துடன்

(3) "மூன்றாம் நாடு" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" "மூன்றாம் நாடு" என்பது இலங்கை தவிர்ந்த வேறு ஏதேனும் ஆள்புலம் அல்லது நாடு எனப் பொருளாகும்;".

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான அட்டவணை VI ஐத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை VI ஆனது, அதன் 6 ஆம் விடயத்தின் (2) ஆம் பந்தியில், "பணிப்பாளர் தலைமையதிபதியானவர்" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "தவிசாளரானவர்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்